பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

S. M. Fernando
OPTICIANS

SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
[Near Bank of Ceylon]
JAFFNA.

# உதயன்

விலை
ரூபா 3/50

கண்வைத்தியநிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாகக் கொடுப்பவர்கள்

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஹூ மாசி மீ 10 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 25 (22-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 16

## முச்சந்தி முரளி



இனிமேல் எங்கடை நகரிலை கம்பியில்லாதொலை பேசிதான் பொருத்த வேணும் போலை . . . !

### விநாடிக்கு 3 பேர் அதிகரிப்பு

வாஷிங்டன், பெப். 22

உலகின்சனத்தொகை விநாடிக்கு 3 குழந்தைகள் மூலம் அதிகரித்துக்கொண்டிருப்பதாக ஐ. நா. ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (உ)

### நேற்றும் 75 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 22

நேற்றும் உடுப்பிட்டி முகாமில்வைத்து 75 பேர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## இந்தியப் படையால் திணிக்கப்பட்ட

# மாகாண அரசாங்கம் சட்ட விரோதமானது

### ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தாக்கு

சென்னை, பெப்ரவரி 22

தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாண அரசு உண்மையில் இந்தியப் படையினரால் திணிக்கப்பட்ட சட்டவிரோதமான அரசாகும்.

இந்த நிலையில் அந்த அரசாங்கத்தில் தமது உறுப்பினர்கள் பதவியை இராஜினாமாச் செய்து விடுதலைப் புலிகளுக்கு இடமளிக்க முன்வருவதாக ஈ. பி. ஆர். எல். எவ். தரப்பில் கூறப்படுவது அந்த அரசாங்கத்தை சட்டபூர்வமாக்கச் சித்திரிக்கும் முயற்சியாகும். எனவே இந்த யோசனை ஏற்கத்தக்கதல்ல.

— இவ்வாறு கூறினார் ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமார். சென்னையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதுள்ள சூழ்நிலையில் இலங்கை அரசு விடுதலைப் புலிகளைப் பகைத்துக் கொள்ளாது என்றே நம்புகிறேன். ஆனாலும் எதிர்காலத்தில் இலங்கை அரசு துரோகம் இழைத்தால் அதற்குப் பதிலளிக்க விடுதலைப் புலிகள் தயாராகவே இருப்பர்.

அனைத்துப் போராளிக் குழுக்களையும் தமிழக முதலமைச்சர் அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான தீர்வுக்கு வழி காண முயன்றுகொண்டிருக்கும்போது, அவருக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் செயலிலோ கருத்திலோ எந்தக் குழுவும் ஈடுபடக்கூடாது — என்றார்.

இராமநாதபுரம் பொலீஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தையும் அவர் கண்டித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இலங்கைத் தமிழ் மண்ணில் மோதல்கள் நின்று, அமைதி

( 5ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா - மாத்தயா இன்றிரவு சந்திப்பு

கொழும்பு, பெப். 22

ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மாத்தயாவுக்கும் இடையிலான சந்திப்பு இன்றிரவு 7-45 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

தற்போது மட்டக்களப்பில் தங்கியிருக்கும் திரு. கோ. மாத்தயாவை அழைத்து வருவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி நேற்று கொழும்பிலிருந்து விசேட ஹெலிக்கொப்டரில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார்.

இன்று காலையில் திரு. மாத்தயா, திரு. யோகி ஆகியோர் கொழும்பு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

### ஜனாதிபதி அஞ்சலி

கொழும்பு, பெப் 22

கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரும் ரூபவாகினியின் முன்னாள் அறிவிப்பாளருமான ரிச்சர்ட் டி சொய்சாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று அஞ்சலி செலுத்தினார்.

பொரளையிலுள்ள சொய்சாவின் இல்லத்தில் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. (ஒ)

## ஸ்ரீலங்கா படையினர் தாக்கி புலிகள் போராளி மரணம்

கிழக்கில் சம்மாந்துறைக்கு அப்பால் மல்வத்தை என்ற இடத்தில் ஸ்ரீலங்கா படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரை மறித்துத் தாக்கியதில் அவர் மரணமடைந்தார்.

உயிரிழந்தவர் தரணி என்ற போராளி என கொழும்பில் விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (உ)

### ஈழத்திலிருந்து தமிழகம் வரும்

## ஆயுதக் குழுக்கள் குறித்து பிரதமர் சிங்குக்கு முறையீடு

சென்னை, பெப் 22

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு ஆயுதக் குழுக்கள் வருவது அதிகரித்து இருப்பதாக இந்திய ஜனாதிபதி வெங்கட் ராமன் பிரதமர் சிங் ஆகியோருக்கு முறையிடப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் எம். பி. வாழப்பாடி இராமமூர்த்தி முஸ்லீம் லீக் எம். வி. அப்துல் ஸமது ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. தி தா. பாண்டியன் ஆகியோர் ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கு கூட்டாக அனுப்பிவைத்துள்ள தந்தி

(6-ம் பக்கம் பார்க்க)

### ஐ. நா. அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 22

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த மூன்று உயரதிகாரிகளும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்றுப் பகல் யாழ் பதில் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரையும் மற்றும் அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்துப் பேசினார்கள். (ஒ-3)

## ஆயுதங்களுடன் ஈழத்தமிழர் மண்டபத்தில் நடமாடியது ஏன்?

சென்னை, பெப். 22

மண்டபம் பகுதியில் கடந்த திங்கள் அதிகாலை தாக்குதல் நடத்திய ஈழத் தமிழ்க்குழு ஆயுதங்களுடன் நடமாடியது ஏன்?

இது குறித்து சில தகவல்கள் வெளியாகியிருப்பதாக சென்னையிலிருந்து பிரசுரமாகும் பிரபல நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அதன் விவரம் வருமாறு:

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான சக வாழ்வுதான் இப்போதைய தேவை- வரதர்

போராளிக் குழுக்களிடையே இப்போதைய தேவை சமாதான சகவாழ்வுதான்.

—இவ்வாறு வடக்கு-கிழக்கு முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

எதிர்வரும் சனிக்கிழமை சென்னையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணுவதற்கான புதிய யோசனைகளை வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சர் தலைமையிலான குழு ஒன்று திரு. கருணாநிதியிடம் சமர்ப்பிக்கும் என்ற தகவலை நேற்று திருமலையில் திரு. வரதராஜப்பெரு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பண்ணைப் பகுதியில்

## கம்பித் திருடரின் கைவரிசை; தொலைபேசி சேவை 'அவுட்'

யாழ்ப்பாணம், பெப். 22

தொலைபேசிக் கம்பித் திருடர்களினால் யாழ் நகருக்கான தொலைபேசிச் சேவை முற்றாகச் செயல் இழந்தது.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் யாழ் பண்ணை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகே கோட்டை, பழைய தபால் நிலையம் ஆகியவற்றுக்கு முன்பாக உள்ள பகுதியில் பிரதானதொலைபேசி ''லைன்கள்'' வரும் இடத்தில் கம்பிகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

இதனால் யாழ் நகருக்கான தொலைபேசிச் சேவை முற்றாக சீர்குலைந்தது.

தொடர்ந்து இப்பகுதியில் தொலைபேசிக்கம்பிகள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டு வருவதால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை தொலைபேசி இணைப்புகளை மீண்டும் வழங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தொலைபேசிக் கம்பித் திருட்டை தடுத்து நிறுத்த

(5ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகள் குறைந்தன

யாழ்ப்பாணம் பெப்: 22

யாழ்ப்பாணத்தில் தற்போது கொலைச் சம்பவங்கள் மிகமிகக் குறைந்துள்ளன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை கொள்ளைச் சம்பவங்கள் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்றிருப்பது குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ — 10)

## யாழ். ரயில் நிலையத்துக்கு வானொலி தொடர்பு சாதனம்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ் ரயில் நிலையத்துக்கு புதிய வானொலித் தொடர்புச் சாதனம் ஒன்று கடந்த வாரம் ரயில்வேத் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

ஏற்கனவே அங்கு பொருத்தப்பட்டிருந்த வனொலித் தொடர்புச் சாதனம் கடந்த மாதம் ஆயுதக் கோஷ்டியினால் அபகரித்துச் செல்லப்பட்டிருந்தது.

எனினும் மீண்டும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலித் தொடர்புச் சாதனம் அங்கு பொருத்தப்பட்டதையடுத்து ரயில் நிலையங்களுக்கிடையிலான வானொலி(வயலர்ஸ்) சேவைகள் சீரடைந்துள்ளன.

யாழ் ரயில் நிலையத்தில் ஏற்கனவே மூன்று தடவைகள் வானொலிச் சாதனங்கள் அபகரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ - 3 - 10)

### மண்டபம் தாக்குதல் சம்பவம்

## வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க கலைஞரிடம் வாழப்பாடி கோரிக்கை

சென்னை, பெப். 22

இராமநாதபுரத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக முழு விவரம் கொண்ட வெள்ளை அறிக்கை ஒன்றை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

செய்தியாளர் மத்தியில் பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நவீன ஆயுதங்கள் போராளிகளால் பதுக்கி வைக்கப்படுவதாக செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

இதுபற்றி நானும் கடந்த இரண்டு மாத காலமாகக் கூறி வருகின்றேன்.

இந்த ஆயுத நடமாட்டத்தின் விளைவு என்ன என்பதை இராமநாதபுரம் சம்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முகாம்களை மூட ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.22

உடுப்பிட்டி, கரணவாய்ப் பகுதிகளில் உள்ள இந்தியப் படை முகாம்களையும் அடுத்த ஒருசில தினங்களில் மூடி விடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. (ஒ-9)

### சுபநேரம்

22 — 02 — 1990

வியாழக்கிழமை மாசி 10

சுபநேரம்:
8 . 01 முதல் 9 . 31 வரை

ராகுகாலம்:
02 . 01 முதல் 3 . 31 வரை

பிரதோஷ விரதம்

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## மண்டபம் தாக்குதலுக்கு "றோ" அமைப்பே காரணம்

### குற்றம் சுமத்துகிறார் வீரமணி

சென்னை, பெப். 22

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்த இந்திய உளவுப்படையான ''றோ'' முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் - மண்டபம் பொலீஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாக திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி விடுத்த அறிக்கையில் இப்படி குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

தமிழ்நாட்டைக் கலவரப் பகுதியாக மாற்ற முயற்சிக்கும் அதிகாரிகள் எவ்வளவு பெரிய நிலையில் இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## ஆயுதங்கள் கடத்தினால் கடும் நடவடிக்கை - கலைஞர்

தமிழகத்துக்குள் ஆயுதம் கடத்தி வருபவர்கள் யாராக இருந்தாலும், எந்த அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை தமிழர்களுக்கு புலிகளினால் பெருமை!

யாழ்ப்பாணம். பெப். 22

தமிழீழ விடுதலைப் புலிகளினால் இந்தியப்படையில் உள்ள தமிழர்களுக்குப் பெருமை.

—இப்படிக் கூறினார் இந்திய அமைதிப்படை உயர் அதிகாரி ஒருவர்.

உதயன் செய்தியாளருடன்உரையாடியபோதே அவர் இதனைச் சொன்னார். தமது பெயர் விவரங்களை பகிரங்கப்படுத்த விரும்பாத அந்த அதிகாரி மேலும் சொன்னதாவது;

''முன்னர் இந்தியப்படையில் கூர்க்காக்களும், சர்தார்ஜிக்களும் (சீக்கியரும்) மட்டுமே வீரர்கள் என்று போற்றப்படுவது வழக்கம். சுத்த வீரர்கள் என்ற மரியாதை அவர்களுக்குத்தான்.

ஆனால் இப்போது நிலைமை வேறு.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியப்படையுடன் நடத்திய வீரம் செறிந்த போராட்டத்தினால் இப்போதெல்லாம் இந்தியப்படையில் சுத்த வீரர்கள் என்ற பெயர் தமிழர்களுக்குத்தான்''—என்றார். (உ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், சபாப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

Brand New (Fastern) புதியது! சகல உதிரிப் பாகங்களுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: Mr S. Siv selvanathan, 47, Temple Road, Jaffna. (2589)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

அடை வைத்துப் பொரித்த கோழிக் குஞ்சுகளோடு சேர்த்து விடக்கூடிய குஞ்சுகள் எம்மிடம் புதன், வியாழக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். இல. 9, கந்தையா லேன், சுன்னாசம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [11820]

### தேவை

வட மாகாணத்தில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையத்திற்கு வேலை செய்யும் ஊழியர்கள் தேவை. 20 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும். கவர்ச்சியான சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: இல. 624, C/o உதயன். C/3887

### தேவை

யாழ் போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் தனியார் நிறுவனம் ஒன்றின் கட்டிட அலுவலகம் (Building Construction Office) ஒன்று அமைப்பதற்கு ஒரு வீடு உடன் தேவைப்படுகிறது. No—626 C/o உதயன் (2609)

கொப்பி கட்டுவதற்கும், விற்பனையாளராகப் பணி புரிவதற்கும் பெண் பிள்ளைகள் தேவை. வெள்ளிக்கிழமை நேரில் சமூகம் தரவும். முன் அனுபவம் விரும்பத்தக்கது ஸ்ரீகாந் புத்தகசாலை 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3894)

### பெண் நெசவாளர் தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவம் மிக்க பெண் நெசவாளர் உடன் தேவை. 25-2-90 காலை 10.00 மணிக்கு நேரில் சமூகம் கொடுக்கவும். மின்தறி நிலையம், T.C. ஒழுங்கை, சங்கானை. [2598]

### தவறிவிட்டது

நீர்வேலிசந்தியில் வசிப்பவராகியவா. பரமநாதன்அடையாள அட்டை இல: 431112027X இ. போச 000537 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேல்தரப்பட்ட முகவரிக்கு கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11854)

### காணவில்லை

501610046 V வ. அருமைத்துரை ஆகிய என்னுடைய அடையாள அட்டையும் சீமெந்துத் தொழிற்சாலை அடையாள அட்டை இரண்டும் மானிப்பாயில் அல்லது தெல்லிப்பழையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வ. அருமைத்துரை, அ, த. க. பாடசாலை வீதி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (2605)

### அறிவித்தல்

யாழ் செயலக சிற்றூண்டிச் சாலை நடத்துனர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 1990-03-02 கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 25/- செயலாளர் யாழ் செயலக நலன் புரிச்சங்கம். (11832)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D· முஸ்தபா யுப்ளிபஸார் 2 ஆம் மாடி யாழ்ப்பாணம். (1996)

### புத்தகம்

சித்திரக்கதைகள் (காமிக்ஸ்) முத்து லயன் - திகில் வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகின்றது. பொக்கற் கலண்டர்களும் கிடைக்கும் ராஜன் புத்தகசாலை 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (2596)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717

### THANK YOU

Holy Infant Jesus ST. Jude ST. Antony For Favours Granted Joerita. (2573)

## TOEFL

English Correspondence Course begins for the Students those who are seeking admissions in foreign Schools, Colleges technical Colleges and universities.

Write for details:

**A. J. MARENA ALICE,**
**Foreign Education Service,**
St. MARY'S ROAD,
SILLALAI,
PANDATERUPPU. (2612)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ் செயலகக் கட்டிடத் திருத்தவேலைகள் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. வேலை விபரங்கள் மற்றும் நிபந்தனைகளையும் கேள்விப்பத்திரப் படிவங்களையும் இச்செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையிலிருந்து யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/- பெறுமதியான காசுக் கட்டளையைச் செலுத்தி 28 - 02 - 1990 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

[சி-3398]

## கேள்விப் பத்திரம்

### வெற்றுச் சாக்கு விற்பனை
### வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4500 வரையிலான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும், ரூபா 250/- கேள்வி வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். வெற்றுச்சாக்குகளின் தரத்தினையும், வகையினையும் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தையும் கட்டி வெற்றுச் சாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

● விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி: 1990-02-28 பிற்பகல் 2.30 மணி

பொதுமுகாமையாளர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்.

[சி-3892]

உ

காரைநகர்

மணிவாசகர் சபையார் பொன்விழாவையொட்டி

நடத்தும்

# கவிதை கட்டுரைப் போட்டிகள்

**பரிசில்கள்:**

முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே ரூபா 1000/-, 500/-, 250/- ரொக்கப் பரிசில்கள் வழங்கப்படும்.

நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெறுபவர்களுக்குத் தனித்தனி, ரூபா 100/- வழங்கப்படும்.

**கவிதைத் தலைப்புக்கள்:**

(1) "கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே"
(2) "சங்கரா யார் கொலோ சதுரர்"
(3) "தெய்வ நிச்சயந் தரும் திருவாசகம்"
(4) "வேண்டத்தக்க தறிவோய் நீ"

**கட்டுரைத் தலைப்புக்கள்:**

(1) சிவபுராணம் திருவாசகத்தின் திறவுகோல்
(2) திருவாசகக் கரு குருபக்தி
(3) திருவாசகத்தில் இலக்கிய நலன்
(4) திருவாசகங் காட்டும் வாழ்வியல்

**விதிகள்:**

(1) இலங்கையர் எவரும் கலந்து கொள்ளலாம். (2) மேலே குறிக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பில் கட்டுரையோ, கவிதையோ அமைதல் வேண்டும். (3) ஆக்கங்கள் முன்பு வெளிவராதனவாகவும், பிறர் எழுதியவற்றின் தழுவல்கள் இல்லாதனவாக வும் இருத்தல் வேண்டும். (4) ஒருவர் கவிதை, கட்டுரை ஆகிய இரு போட்டி களிலும் கலந்துகொள்ளலாம். (5) கவிதைகள், வெண்பா முதலிய நால்வகைப் பாக்களாக வேனும், பாவினங்களாக வேனும் இருத்தல் வேண்டும். பாவும் பாவின மும் கலந்தும் வரலாம். (6) கவிதைகள் 200 அடிகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ஆசிரிய விருத்தமாயின் அறுசீர்கள் முதலாக எட்டுச்சீர்கள் வரை அமைந் தனவாக இருத்தல் வேண்டும். (7) கட்டுரைகள் 2000 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். (8) ஆக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டு முப்பிரதிகளில் அனுப் பப்படுதல் வேண்டும். (9) பரிசு பெற்ற கவிதைகளையோ, கட்டுரைகளையோ அச்சிடும் உரிமை சபையினர்க்கு மட்டும் உண்டு.

" தென்னகத் தமிழறிஞர் மூவர் கொண்ட குழுவின் தீர்ப்பே முடிவானது "

இறுதித் திகதி: கவிதை, கட்டுரை யாவும் 15 - 4 - 90க்கு முன் பதிவஞ்சலில்

செயலாளர், மணிவாசகர் சபை, காரைநகர்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (சி/3397)

## வெளிவந்துவிட்டது

### வரலாறு ஆண்டு - 6

1990ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வரலாற்று புதிய பாடத்திட்டத்திற்கு சிறந்த உதவி நூலாக அமையும் வகையில் பிரபல ஆசிரியர்களால் ஆக்கப்பட்ட நூல்.

வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் [2603]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேலாயுதம் நாகராஜா
[நாகேந்திரன்]

மலர்வு: 15 - 08 - 1969
உதிர்வு: 04 - 03 - 1989

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் எமக்கு நல்வழிகாட்டி அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே!

இறை சிந்தையோடு வாழ்ந்த தங்கள் வாழ்வு ஒரு அமரகாவியம். எம் நெஞ்சில் நினைவுள்ளவரை தாங்கள் நிலைத்து இருப்பீர்கள்.

தங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளை, பெற்றோர், சகோதரி, மைத்துனர்
மணற்பகுதி,
புத்தூர். [2602]

# யாழ். வங்கிகளில் நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப் 22

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் J/46 அரியாலை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 2 ஆம் கட்ட மீளக் குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தை பெற்று வருமாறு கோரப்பட்டுள்ளது.

அதே சமயம் மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம்பிரதான வீதிக்கிளையில் 2 ஆம் கட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் வழங்கப்பட உள்ளன.

24 ஆம் திகதி வேலணை, கரம்பன், தீவு தெற்கு, நாரந்தனை கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 1243 குடும்பங்களுக்கும்,

25 ஆம் திகதி இமையாணன், உடுப்பிட்டி வடக்கு, உடுப்பிட்டி கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 1151 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். (இ)

## மீண்டும் சைக்கிள் களவு

யாழ்ப்பாணம், பெப் 22

யாழ்- ரயில் நிலையத்தில் சைக்கிள் களவு அதிகரித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

காலை நேரங்களிலே இந்த களவு இடம் பெறுவதாகப் புகார் கூறப்படுகிறது. (இ-3)

### 125 ஆவது தென் இந்திய சமய சரித்திர
## கலாச்சார சுற்றுலா

(தமிழ்நாடு, கேரளா, ஆந்திர கர்நாடக மாநிலங்களில்)

✶ குளு, குளு ஊட்டி ஸ்பெஷல் ✶

ஆரம்பம்: 10 – 04 – 90 முடிவு 30 – 04 – 90

இடங்கள்: திருச்சி, மலைக்கோட்டை பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருவாணைக்காவல், சமயபுரம், கன்யாகுமரி, அரபிக் கடல், இந்து சமுத்திரம், வங்காள விரிகுடா ஒன்று சேரும் திரிவேணி சங்கமம், நடுக்கடலில் விவேகானந்தர் மண்டபம், குமரிஅம்மன் கருங்கல் தூண்களில் ச - ரி - க - ம - ப - த - நி - ஸ நாதங்கள், மிருதங்க ஒலி, ஜலதரங்க ஒலிகள் கேட்கும் சுசீந்திரம், குற்றாலம் நீர்வீழ்ச்சி, மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திம்பம்மலை, மைசூர் மகாராஜா அரண்மனை, சாமுண்டீஸ்வரி அம்மன், நந்தி பிருந்தாவனம், பங்களூர், திருப்பதி, திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம், வி.ஜி.பி. தங்கக்கடற்கரை, கபாலீஸ்வரர் அஷ்டலக்ஷ்மிஆலயங்கள், அண்ணாசமாதி, எம்.ஜி.ஆர். சமாதி, சிதம்பரம், சீர்காழி, நந்தனாருக்கு நந்தி விலகிய திருப்புன்கூர் ஆலயம் முருகப்பெருமான் ஆறு படை வீடுகள், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, பழனி, சுவாமிமலை, திருத்தணிகை வட பழநி, வள்ளுவர் கோட்டம், மதராஸ்,

## ★ விநாயகா டூர்ஸ் ★

(அரசாங்க வியாபார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம் -7753)

நாகம்ஸ் தியேட்டர் காம்பிளக்ஸ், சுன்னாகம்.

இராமேஸ்வரம், ஸ்ரீவல்லிபுத்தூர், ஆண்டாள், இராஜபாளையம். திருவேற்காடு, கருமாரி அம்மன், திருக்கடையூர், அபிராமி அம்மன், பூம்புகார், காரைக்கால அம்மையார், நாகூர் ஆண்டவர், திருநள்ளார் சனீஸ்வரன் கோயில், நாகபட்டினம், வேளாங்கண்ணி மாதா, திருவாரூர், குளு குளு ஊட்டி, புட்டப்பர்த்தி

குறைந்த செலவில் நடத்தப்படும் யாத்திரை சுற்றுலாவில் குறைந்த இடங்களே உள்ளன. உடனே தொடர்பு கொள்ளவும்.

திரு. R. சிவலிங்கம்,
'ரத்னா மோட்டார்ஸ்' 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கிழக்கு மாகாண அன்பர்கள்
Dr R. சிவஅன்பு, (R.M.P)
ஆதார வைத்தியசாலை கல்முனை,
என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

இராஜநாயகி தியேட்டர்,
காங்கேசன்துறை.

ஏ. வி. அருணாசலம் (முகவர்) [2611]

பனை அபிவிருத்திச் சபை

## சாற்று உற்பத்தி போதனாசிரியர் பதவி வெற்றிடங்கள்

மேற்படி பதவிகளுக்கு எட்டாம் வகுப்பு சித்தியடைந்த, குறைந்தது ஐந்து வருடங்கள் சீவல் தொழிலில் அனுபவம் உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும், தொழில் நுட்ப உத்தியோகத் தரத்துக்குரிய சம்பளம் வழங்கப்படும், பதவி நிரந்தரமானது.

விண்ணப்பங்கள் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பொது முகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, 47, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

[சி-3396]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

**பொருள்:**

உள்ளதை ஒளிக்காமல் உள்ள மகிழ்ந்து கொடுக்கும் கண்போல் சிறந்தவரிடத்திலும் சென்று இரவாமலிருப்பதே கோடி மடங்கு நல்லது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
22- 02- 1990  த. பெ.இலக்கம் : 23

# இராமமூர்த்தியின் இலக்கு

இந்தியாவில், இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளையின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கடந்த சில வாரங்களாகச் சற்றும் இங்கிதமில்லாத முறையில் நடந்து வருகிறார்.

குறிப்பாக, இந்திய அமைதிப்படை ஈழத் தமிழ் மண்ணில் இருந்து விலகத் தொடங்கியதன் பின்னர், மத்தியில் இந்திரா காங்கிரஸ் கட்சி கவிழ்ந்து, திரு. வி. பி. சிங் பிரதமரான பின்னர், ஈழத் தமிழர் விவகாரம் குறித்து வாழப்பாடியாரின் வாய், பாம்பு நாக்குப் போல நீண்டு விஷம் கக்கி வருகிறது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ராஜீவ் ஆட்சியின் அணுகுமுறையும், நடைமுறையும் சரியானவையே என்ற பார்வையுடனும், காங்கிரஸ் ஆட்சியாளரைத் தவிர மற்றவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்ற உட்பொருள் வைத்தும் அவர் அறிக்கைகள், கருத்துக்கள் வெளியிட்டு வருகிறார்.

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதில், புதிய மத்திய அரசு வெற்றி காணாமல் தடுத்துக் குழப்பிவிட வேண்டும் என்பதே அவரது "வாயின்" உள்நோக்கமாக, இலக்காக இருக்கிறது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அவர் அவசரக் குடுக்கைத் தனமாக, முந்திரிக் கொட்டையாக முந்திக்கொள்வதும் அதனையே காட்டுகிறது.

ஆகக் கடைசியாக அவர் வெளியிட்டிருக்கும் கருத்து (அறிக்கை) அதனை மிக அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மத்தியஸ்த முயற்சியை முதலமைச்சர் கருணாநிதி கைவிட்டு விட வேண்டும் என்பதே அவரது "புத்திமதி". ஈழத்தமிழர் விவகாரத்தில் அவருக்கு உள்ள அக்கறையையும், கரிசனையையும் எடைபோட உதவும் தராசு அது.

ஈழத்தமிழர் பிரச்சினையை உரிய அணுகுமுறையுடன் கையாண்டு கருணாநிதி அரசியல் செல்வாக்குப் பெற்றுவிடக் கூடாது என்பதில் தான் திரு. இராமமூர்த்திக்கு அக்கறை. இவ்விடயத்தில் கருணாநிதி வெற்றி கண்டு விட்டால், தமிழ் நாட்டில் காங்கிரஸ் செல்வாக்குச் சரிந்துவிடுமே என்ற பயத்தினால் எழுந்த எண்ணம் இது.

மத்தியஸ்தத்தில் திரு. கருணாநிதி வெற்றி கண்டு விட்டால், இலங்கைத் தமிழர் விவகாரத்தை காங்கிரஸ் கையாளத் தெரியாமல் போட்டடித்து விட்டதே எனத் தமிழக மக்கள் நச்சரிப்பார்கள். அந்த நச்சரிப்பு, கட்சியின் அரசியல் செல்வாக்கைத் தேய்த்து விடும். அந்த தேய்மானம் தமது சொந்த அரசியல் வளர்ச்சியைக் கிள்ளி விடலாம் என திரு. இராமமூர்த்தி அஞ்சுகிறார் போலும்!

ஈழத் தமிழர் பிரச்சினையை தமது சொந்த இலாபங்களுக்காக, பொறியிலிருந்து தீயாக வளர்த்தவர்கள் தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்கள். தமது அரசியல் லாபத்தைப் பெருக்குவதற்காக, ஆட்சி பீடத்தைப் பிடிப்பதற்காக, தமிழர்களை பகடைக் காய்களாக்கி அரசியல் சதுரங்கம் விளையாடித் தோல்வி கண்டவர்கள் அவர்கள்.

ஆட்சியில் இருக்கும் வேளையில், ஒரு மாதிரியாகவும், கதிரையை விட்டு இறங்கி இருக்கும்போது வேறு மாதிரியாகவும், நேர்முரணாகவும் அணுகி வந்த குற்றம் தென்னிலங்கையில் உள்ள அனேகமாக, எல்லா அரசியல் தலைவர்களையும் சார்ந்தது.

அந்தக் குற்றத்துக்கு ஏற்ற தண்டனையை, தலைவர்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களும் அனுபவித்துச் சலித்த நிலை இப்போது.

தமிழரான திரு. இராமமூர்த்தியும் அதே அரசியல் சதுரங்கத்தை ஆடுவதற்கு நினைப்பது வேதனைக்குரியது.

ஈழத் தமிழர் விவகாரத்தில் தமிழ்நாடு அம்சத்துக்கு (Tamilnadu Factor) ஒரு முக்கிய இடம் உண்டு என்பதை ஈழத் தமிழர்கள் எப்போதும் மறந்ததில்லை. ஆனால் அதே அம்சத்தைத் துஷ்பிரயோகம் செய்து தமது சொந்த அரசியல் நலனைக் காப்பதற்குத் திரு. இராமமூர்த்தி முனைவது எந்த வகையிலும் ஒவ்வாதது, நியாயமற்றது. ஆகவே அவர் தமது அணுகுமுறையையும், போக்கையும் மீள்பரிசீலனை செய்வாராகுக.

## 100 ரூபா முத்திரையை என்ன செய்வது?

யாழ்ப்பாணம் பெப் 21

இலங்கை அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டுள்ள 100 ரூபா பெறுமதியான முத்திரைகளை வைத்திருப்பவர்கள் என்ன செய்வது?

இது தொடர்பாக அரசின் அறிக்கை எதுவும் யாழ் மத்திய தபால் அலுவலகத்திற்கு இன்னமும் கிடைக்கவில்லையாம்.

100 ரூபா பெறுமதியான முத்திரை தடை செய்யப்பட் [illegible] விற்பனை செய்து வந்தோரும் கொள்வனவு செய்து வைத்திருந்தோரும் பெரும் பாதிப்பு அடைந்த நிலையில் யாழ் தபால் அலுவலகத்துக்கு சென்று மாற்றுவழி கோரி வருகின்றனர்.

எனினும் இது தொடர்பான எந்த அறிவித்தலும் யாழ் தபால் அலுவலகத்துக்கு கிடைக்காததால் தபாலக உயரதிகாரிகளும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் [illegible] (இ 17)

## செயலகத்துக்கு உணவு முத்திரை நிதி வந்தது

யாழ்ப்பாணம் பெப் 22

உணவு முத்திரைக் கொடுப்பனவுக்கான நிதி யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இங்கு வந்து சேர்ந்துள்ள 1 கோடி 80 லட்சம் ரூபா ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிகிறது. (ஒ-3-10)

## பணம்கொடுக்கல் வாங்கல்

கிளிநொச்சி, பெப் 22

கிளிநொச்சி இலங்கைவங்கி கிளையில் பல வருடகால இடைவெளியின் பின் தற்போது பணம்கொடுக்கல்வாங்கல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை இந்த வங்கியின் பணம்கொடுக்கல் வாங்கல்கள் கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தில் வைத்தே நடைபெற்று வந்தன. (இ-76)

# பயிலுநர் ஆசிரியர் தெரிவு: ஏராளமான முறைப்பாடுகள்

## கல்வித் திணைக்களத்தில் குவிகின்றனவாம்

யாழ்ப்பாணம், பெப் 22

பயிலுநர் ஆசிரியர் தெரிவு சம்பந்தமாக ஆயிரக்கணக்கான முறையீடுகள் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்துள்ளன.

பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் தயாரிக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன.

ஓரிரு நாளில் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

அதே நேரம் இந்த நேர்முகப் பரீட்சை சம்பந்தமான முறையீடுகள் யாழ். கல்வித் திணைக்களத்தில் குவிந்துள்ளன. (இ-3-10)

## இராசதுரை பதவி ஏற்பு

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள முன்னாள் அமைச்சர் திரு. செ. இராசதுரை சமீபத்தில் மலேசியாவில் தமது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-21)

## தோட்டங்களை மீண்டும் தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்கு எதிர்ப்பு

அரசுக்குச் சொந்தமான தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களை மீண்டும் தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

காங்கிரஸின் பொதுச்செயலாளரும் துணை அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி இதுபற்றி கருத்து வெளியிடுகையில், "தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை காங்கிரஸ் கடுமையாக எதிர்க்கும். இது குறித்து அரசுத் தலைமைப் பீடத்துடன் விரிவாகப் பேச்சுக்கள் நடத்த இருக்கின்றேன்," என்றும் சொன்னார்.

தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களில் 70 சத வீத தோட்டங்கள் அரசுக்குச் சொந்தமாக உள்ளன.

1972—1975 ஆண்டுக்காலத்தில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்கள் தற்போது நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. இதன் காரணமாகவே தோட்டங்களை தனியார் மயப்படுத்த பிரேமதாஸா அரசு திட்டமிட்டு வருகிறது.

இத்தோட்டங்களில் சுமார் 5 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 5 இல் 4 பங்கினர் இந்திய வம்சாவழியினர். இவர்களில்பெரும்பாலானோர் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான திரு. எஸ். தொண்டமான் அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சராக இருக்கிறார். (இ-எ)

## ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கத்தின்

# ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப் 22

ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கம், யாழ். கல்வித்திணைக்களத்தோடு இணைந்து 9 ஆம் ஆண்டு வகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்றை எதிர்வரும் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடத்தவிருக்கிறது.

இக்கருத்தரங்கு 9ஆம் ஆண்டுத் தமிழ்ப்பாட நூலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர், பண்டிதர் ச. பொன்னுத்துரை, வித்துவான் சி. குமாரசாமி, கலாநிதி சி மௌனகுரு, கவிஞர் சோ. பத்மநாதன், திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

கருத்தரங்கின் தலைவர்களாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, கல்வியதிகாரிகள் அ. தங்கராசா, ஏ. வி. ஏ. எம். இனாலு ஆகியோர் கடமையாற்றுவர்.

இரண்டாம் நாள் கருத்தரங்கின் நிறைவு நிகழ்ச்சியாகக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் ஆ. தி. பா. சங்கம் நடத்திவரும் பிரவேச பண்டித, பாலபண்டித பரீட்சைகளில் 1989 இலும் அதற்கு முன்பும் தோன்றிச் சித்தி எய்தியோர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றிச் சித்தி பெற்றுச் சான்றிதழ்களை பெறாதிருக்கும் பரீட்சார்த்திகள் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சிக்குச் சமுகமளித்துத் தத்தம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பண்டித பரீட்சைச் செயலாளர் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சர்மா அறிவிக்கின்றார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வருடந்தோறும் நடத்திவரும் ஜி.சி. ஈ. (சா/த) முன்னோடித் தமிழ்ப்பரீட்சை மார்ச்மாதம் 3 ஆம் திகதி நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இ)



யாழ்- பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு செவ்வாய்க்கிழமை வருகை தந்த பிரிட்டிஷ் தூதுக்குழுவினர் "பரவள்ளியில் இருந்து திரவகுளுக்கோஸ்" தயாரிக்கும் உபகரணங்களைப் பார்வையிடும் போது எடுக்கப்பட்ட படம். படத்தில் இடமிருந்து வலமாக திரு. ஜோன்போஜர் றொபேர்ட் ஸ்ரேஜன், செல்வி கிளையா கூட், ஜோர்ஜ்பிறாலி ஆகியோர் காணப்படுகின்றனர். (இ-10)

## மீண்டும் அதே இடத்தில்

வேலணை, பெப் 22

இந்திய இராணுவ வருகையின் பின் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வந்த யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை பிரதேசசபை அலுவலகம் மீண்டும் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளபழைய அலுவலகத்தில் இயங்கஆரம்பித்துள்ளது. (இ-167)

## யாழ் பல்கலைக்கழகம்:

# வெளியூர் மாணவர் தங்க 4 விடுதிகள் நிறுவப்பட்டன

யாழ்ப்பாணம், பெப் 22

யாழ் பல்கலைக்கழக வெளியூர் மாணவர்களின் வசதியை முன்னிட்டு நான்கு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கான விடுதி ஒன்றும் ஆண்களுக்கான விடுதி மூன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

புனரமைப்பு நிதியில் இருந்து இவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விடுதிகளில் 120 மாணவர்கள் தங்க வசதி அளிக்கப்பட்டுள்ளது.

விடுதிகளுக்கான உதவி வார்டன்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு விடுதி முனியப்பர் வீதியிலும், மற்றவை பல்கலைக்கழக சுற்றாடலிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் விரிவுரை மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சு வழங்கிய 2 கோடி 60 லட்சம் ரூபா உதவியில் 60 லட்சம் ரூபா செலவில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

மீதமாணபணத்தில் மேலும் பல வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (இ-3)

## பரிசளிப்பு விழா

கோப்பாய்வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் க. விநாயகலிங்கம் தலைமையில் இன்று வியாழக்கிழமை மாலை நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கோப்பாய் கொத்தணி அதிபர் பூ. க. இராசரத்தினம் கலந்து கொள்வார். (இ-72)

## மீண்டும் பஸ் சேவை

கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பு மூதூர் வெருகல் ஊடான பஸ் சேவை தற்போது மீண்டும் நடைபெறுகின்றது. (இ 21)

# சிமெந்து தொழிலாளர் சங்கம் ஆட்சேபம்

காங்கேசன் பெப். 22

காங்கேசன்சிமெந்துகூட்டுத்தாபன தொழிலாளர்களின் சம்பள விகிதத்தில் செய்யப்பட்ட மாற்றம் குறித்து காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட சம்பள மாற்றத்தின் படி 1-1-88 இலிருந்து காங்கேசன் துறை சிமெந்துக் [illegible] தொழிலாளர்களுக்கு [illegible] விகிதங்கள் [illegible]

திடீரென இந்த மாதம் இந்த சம்பள விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்டு சம்பளம் குறைக்கப்பட்டது குறித்து மேற்படி யூனியன் சிமெந்து கூட்டுத்தாபன நிர்வாகத்திற்கும், பொது முகாமையாளருக்கும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இந்த திடீர் மாற்றத்தை இரத்துச் செய்து முன்னர் போன்று சம்பளத்தை வழங் [illegible] (இ - 68)

### நினைவில் இன்று

- சாரணத்தந்தை பேடன் பவுல் பிரபு ஜனன தினம்
- கஸ்தூரிபாய் நினைவு தினம்

## வாசகர் திருமுகம்

### நாமகள் வித்தியாசாலை

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலையில் கற்பிப்போர் பெரும்பாலும் உள்ளூர் ஆசிரியர்களே. இதனால் பல மனஸ்தாபங்கள் காரணமாக ஆசிரியர்களிடையே ஏற்படும் போட்டிகளால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பாடங்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. சைவ பரிபாலனசபை பரீட்சை உட்பட பொதுப் பரீட்சைகள் நடைபெறுவதில்லை. இதே நிலையில் இயங்கினால் மாணவரின் கல்வி தொடர முடியாத நிலை ஏற்படும்.

அதிபர் ஒருபுறம், ஆசிரியர்கள் ஒருபுறம், மாணவர்கள் ஒருபுறம். இதே நிலை தொடராது பாடசாலையை மேம்படுத்த கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா?

இங்ஙனம்
நலன்விரும்பிகள்

### சோதனை நீங்குமா?

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு எழுவைதீவு ஆகியவற்றுக்கான பிரயாணம் முன்போலவே சோதனைக்குட்பட்டதாக இருக்கின்றது.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்களும் இந்தச் சோதனைக்கு ஆளாகி அல்லல் படுகின்றார்கள்.

பிரயாணிகள் புத்த விகாரைப் பாலத்தில் இறக்கப்பட்டு சோதிக்கப்படுகின்றனர்.

இந்தக் கட்டுப்பாடுகளையும் சோதனைகளையும் நீக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

என். கே. கிருஷ்ணன்
நயினாதீவு.

### யாழ் - கச்சாய் பஸ்சேவை

கொடிகாமத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட கச்சாய் வீதி வழியாக முன்னர் 805 ஆம் இலக்க இ.போ.ச. பஸ்சேவை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் இப்பகுதி மக்கள் அப்போழுது சாவகச்சேரிக்கும் கொடிகாமத்துக்கும் செல்வது வசதியாக இருந்தது.

தற்போது இச்சேவை இல்லாதிருப்பதால் வியாபாரிகள், மாணவர்கள் உட்பட மக்கள் கால் நடையாகவே இவ்விடங்களுக்குச் செல்கின்றனர்.

கச்சாய் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

செ. கமலாம்பிகை
கொடிகாமம்.

### கருத்தரங்கு

யாழ். கல்வித்திணைக்கள படவரைஞர் பயிற்சி நெறி மாணவர்களுக்கு, நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு கருத்தரங்கு ஒன்று யாழ் இந்து [illegible] கல்லூரியில் நடாத்தப்படவிருக்கின்றது.

யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பிரதமவிருந்தினராகவும், முறைசாரா கல்வி அதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ 3)

## நாய்களுக்கு மின்சாரம் பாய்ச்சி மரண தண்டனை

மட்டக்களப்பு பெப் 22

மட்டக்களப்பில் நாய்களுக்கு மின்சாரம் பாய்ச்சி மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

இத் தண்டனை மாநகர சபையினால் [illegible] நாய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் [illegible]

மாநகர சபை தெருவில் [illegible] நாய்கள் பிடிக்கப்பட்டு [illegible] மின்சாரம் பாய்ச்சப்படுகின்றது. (இ 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வி மயூரி தில்லைநாதன்

"வதனா" அவர்களின்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



ஆனந்த மழையில்: 03 - 11 - 1986

ஆழ்ந்த துயரில்: 23 - 01 - 1990

தாரணியில் வந்துதித்த நிலவே
தாயின் மடியிலே தவழ்ந்து மகிழ்கயிலே
தேயும் நிலவென்று எண்ணி நாம் பார்த்ததில்லை
சேயுன் எதிர்காலம் சிறக்கும் என்று இருக்கையிலே
மருந்தும் வைத்தியமும் இல்லாக் கொடும் நோயால்
மழலையில் வருந்திய உன்னை
உறக்கமில்லாமல் தூக்கி தோளினில் சுமந்த சுகத்தை
மறக்கமுடியாமல் ஆக்கி விட்டு மறைந்தனையோ
மயூரியே!
அப்பா அம்மா என்று ஆயிரம் முறை
அழைத்திட்ட உன்னை
''அம்மாச்சி'' என்று அன்போடு அழைப்பதற்கு
அவனியில் எமக்கிருக்கின்ற தெய்வமே தம்மா
அள்ளி அணைத்து கொஞ்சி மகிழ்ந்திடவே
ஆசைக்கு இளையவளாய் இருந்த ஒளியே
அழியாக் கோலங்கள் காட்டி எம்மை
அழ வைத்து அகல் விளக்காய் நிலைத்திட்டாயே
அப்பாவோடு அம்மாவும் அம்மம்மாவும்
எப்போதும் உன் திருவடிக்கே
இன்ப மலர் சாத்தி நிற்போம்
முப்போதும் உன் அண்ணா
அக்காமார் இருவரும்
தப்பாமற் பிரார்த்திப்பார்கள்
சாந்தியினை காண்பாயே

பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா,
அம்மம்மா, அண்ணா,
அக்காமார்.

427/1. ஸ்ரான்லி வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். [11833]

---

## 31ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டியும்



உடுவில்

## திருமதி பாக்கியம் சின்னத்துரை

உதயம்: 1910 - 04 - 14

அஸ்தமனம்: 1990 - 01 - 23

அன்பு மனைவியாக அருமைத்தாயாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது துக்கத்தில் பங்கு கொண்ட சுற்றத்தார், உறவினர்கள், நண்பர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கீரிமலையில் கிரியை 1990-02-21 — 8.00 மணி
வீட்டுக்கிருத்தியை, பிரார்த்தனை; 1990-02-22
வியாழக்கிழமை காலை 10.00 மணி
தயவு செய்து வருகை தரவும்.

இங்ஙனம்

திரு. திருமதி A. கல்யாண சுந்தரேசன்
திரு. திருமதி S. பாலராசா,
திரு திருமதி K. நித்தியானந்தன்,
திரு. திருமதி T. தமசீலன்,
திரு. திருமதி J புஷ்பநாதன்.

1ம் கட்டையடி,
உடுவில், மானிப்பாய் றோட். [2595]

---


# T V

# TRAVELS & TOURIST

## உடனடி வேலைவாய்ப்பு

### ★ KUWAIT ★

[பிரபல போக்குவரத்துக் கம்பனியில் வேலைவாய்ப்பு]

| | | | |
|---|---|---|---|
| 1. | கனரக சாரதிகள் | 60 பேர் | 70 டினார் |
| 2. | சாதாரண வாகன சாரதிகள் | 40 பேர் | 55 டினார் |
| 3. | ரயர் பிற்றர் | 03 பேர் | 50 டினார் |
| 4. | பெண் செக்ரட்டறி | 01 ஆள் | 90 டினார் |
| 5. | டீசல் மெக்கானிக் | 05 பேர் | 90 டினார் |
| 6. | பெண் கிளீனேர்ஸ் | 50 பேர் | 30 டினார் |

ஒன்றரை மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம். கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம், அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

● மற்றும் குவைத் நாட்டிற்கு பணிப்பெண்களாக செல்வோருக்கு இரு வாரத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

வயது எல்லை ஆண்கள் 20—47 வரை
பெண்கள் 30—45 வரை

### ★ SAUDI ARABIA ★

| | | |
|---|---|---|
| 1 | Cleaner | 400 SR |
| 2 | Plumber | 550 SR |
| 3. | Electrician | 550 SR |
| 4 | Carpenter | 550 SR |
| 5. | Civil Engineer | 1200 SR |
| 6 | Electric Engineer | 1700 SR |
| 7. | Telephone Technician | 1000 SR |
| 8. | Painter | 550 SR |
| 9. | Waiter | 375 SR |

கடவுச்சீட்டு, 3 படம் அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 21 — 47 வரை

**Front of Railway Station
Brown Road,
KOKUVIL.**

[சி-3878]


---

## இல்ல விளையாட்டு

கோப்பாய், பெப் 22

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை மாலை நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. மா. சண்முகநாதன் கலந்து கொள்வார். (இ-72)

---

மக்கள் முகம்

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப் 22

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபொழுது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. பூபாலசிங்கம் உபதலைவர்கள்; திருவாளர்கள்; பொ. மகேந்திரன் எம். டி. தம்பிராஜா, கே. என். வை. மொறிஸ் எஸ். உமாகாந்தன், டி. எம். வேதாபரணம் செயலாளர்: திரு. க. நந்தகுமார் உபசெயலாளர்: தனாதிகாரி திரு. எஸ். விமலதாசன் செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள்: ஆர் செல்வராஜாஎம். சிதம்பரப்பிள்ளை ஆர் சிறீதரன்எஸ். சிவகுமார். கே. யதுகுலசிங் (இ)

---

## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



செல்வன்

## யோகரத்தினம் பிரதாபன்

அன்னை மடியில்:- 26 - 08 - 1972

ஆண்டவன் அடியில் 05 - 03 - 1989

திதி: 22 — 02 — 1990

'பால் மணம் மாறாப் பாலகனம்மா நான்' என்று அடிக்கடி கூறி எம்மைச் சிரிக்க வைப்பாயே எங்கள் சிரிப்பை அழுகையாக மாற்றி விட்டு பால் மணத்துடனேயே பறந்து விட்டாயே! அம்மா, அண்ணா, அக்கா, மட்டுமா? உன் இனிய நண்பர்கள், நம் குடும்பத்தினர் அனைவரும் இன்றும் பிரதா! பிரதா!! என்று கண்ணீருடன் உன்னை நினைவு கூர்கிறார்கள். உன் ஆத்மா சாந்தியடைய அனைவரும் நீ வணங்கும் கண்ணபிரானைப் பிரார்த்திக்கிறோம்.

அம்மா — கலா யோகரத்தினம்,
அண்ணா — பார்த்திபன்
அக்கா — மதுரா

தெணியம்பை,
வல்வெட்டித்துறை. [2606]

---

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்

## கந்தப்பிள்ளை செல்வரட்னம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

தோற்றம்: 16 - 06 - 1934

மறைவு: 04 - 03 - 1989

திதி: 22. 02. 1990

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலிச் கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, மக்கள்.

மணிபவனம்,
நடேஸ்வராக் கல்லூரி வீதி,
காங்கேசன்துறை. (11831)

---


## நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா? இன்றே தீர்வு காண

# சிங்கர்

## பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்







கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500 கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1''×1'' ரூ. 4,390/-
ஈ.பி. 15 1½''×1½'' ரூ. 5,990/-
ஈ.பி. 20 2''×2'' ரூ. 7,290/-




விவசாயப் பிரிவு

சிங்கர்*

மாசற்ற மேன்மை

சிங்கரின் [illegible] சேவை உலகத்தையது. நம்பகமானது. [illegible]வடங்கலானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கன் பிரச்சினைக்குத்தீர்வுகாணும் அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம்

## நஜிப் பதவி விலக வேண்டியது இல்லை என அறிவிப்பு

லண்டன், பெப் 21

ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதில் இதுகாலவரை கொண்டு இருந்த நிலைப்பாட்டில் அமெரிக்கா மாற்றம் செய்துள்ளது.

சோவியத் ஆதரவு பெற்ற ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா முதலில் பதவி விலகிய பின்னரே, அரசியல் தீர்வுக்கான முதற் சுற்றுப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா இது காலவரை வற்புறுத்தி வந்தது.

அண்மையில் மாஸ்கோ சென்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் முதல் தடவையாக இந்த நிபந்தனையைக் கைவிடுவதாக சோவியத் தலைவர்களிடம் தெரிவித்தார்.

ஆப்கன் சிவில் யுத்தத்துக்கு தீர்வு காண்பதில் புதிய கருத்து உடன்பாடு ஒன்றை அடைவதில் மேற்கு நாட்டு அரசுகள் ஈடுபட்டுள்ளன.

இதே வேளை—

ஆப்கனில் உள்ள முஜாஹிதீன் கெரில்லாக்கள் 3 கோஷ்டிகளாக பிரிந்து செயல்படுகின்றனர்.

ஏழு முஜாஹிதீன் கெரில்லாக் குழுக்கள் சேர்ந்து அமைத்த காபந்து அரசும் ஸ்தம்பிதநிலையை அடைந்து விட்டது.

இதனிடையில்— ஆப்கனிஸ்தானை இராணுவ சூன்ய பிரதேசமாக்கும் பத்து அம்ச யோசனை ஒன்றை சோவியத் யூனியன் வெளியிட்டிருக்கிறது.

இந்த யோசனைகளை ஆராய நான்கு நாடுகளின் மாநாடு ஒன்று ரோம், வியன்னா, அல்லது ஜெனிவாவில் இடம் பெறலாம்.

சோவியத்யூனியன், பாகிஸ்தான், அமெரிக்கா, ஈரான் ஆகிய நாடுகள் இம்மாநாட்டில் பங்குபற்றும். (எ)

# கணித, வாக்கிய பஞ்சாங்கம்; காஞ்சி ஸ்வாமிகள் கருத்து

## சென்னையில் நடந்த சோதிடர் மாநாட்டில்

சென்னை, பெப் 21

வாக்கியப்படி பஞ்சாங்கங்கள் கணிப்பதால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. கணிதப்படி பஞ்சாங்கங்கள் கணிக்க வேண்டும்' என்று காஞ்சி காமகோடி பீடம் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்தார்.

சென்னையில் அண்மையில் அகில உலக ஜோதிட மாநாட்டை ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் துவக்கி வைத்துப் பேசினார்.

'ஜோதிட சாஸ்திரம் இந்து சமயத்தில் வேதத்திற்கு அங்கமாகச் சொல்லப்பட்டது.

ஆனாலும்கூட ஜோதிட சாஸ்திரம் அனைவருக்கும் சொந்தமானது. இதில் பாகுபாடு எதுவும் கிடையாது. அனைத்துச் சமயத்தினருக்கும் பலன் தரக்கூடியது'

'அனைத்தும் விதிப்படி தான் நடக்கும். பிரச்சினைகளின் வேகத்தைக் குறைப்பதற்கும், இனி வருங்காலத்தில் துன்பங்கள் வராமல் இருப்பதற்கும் சோதிடம் உதவியாக இருக்கும். சோதிடம் என்பது சோம்பேறித் தனத்தை சொல்லிக் கொண்டிருப்பதல்ல'

வெயிலின் வெப்பத்தைத் தடுக்க, அதன் வேகத்தைக் குறைக்க நமக்கு குடையும் செருப்பும் உதவுவதுபோல, சோதிடம் மனிதர்களின் துன்பங்களின் வேகத்தைக் குறைக்க உதவியாக இருக்கிறது. கணிதப் பிரகாரம் ஜாதகம் கணிக்க வேண்டியது அவசியம்.

நிகழ்ச்சியையொட்டி, அமைக்கப்பட்டிருந்த சோதிடக் கண்காட்சியை ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திறந்து வைத்தார். சூரியனார் கோயில் ஆதீனம் தவத்திரு தெய்வசிகாமணி சந்நிதானம், நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்துப் பேசினார். அகில உலக ஜோதிட சங்க இயக்குநர் கே. பார்த்தசாரதி தலைமை வகித்துப் பேசினார்.

இந்த மாதம் 17ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த மாநாட்டில் நாட்டின் பல பகுதியிலிருந்து சோதிடர்கள் கலந்து கொண்டனர். (எ-4)

# ★ பிறந்ததின வாழ்த்து ★



## செல்வன் பிரணவன் (கபில்)

[22-02-1990]

ஸ்ரீ ஜெயலிங்கம் – ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரணவன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று 22-02-90 கரணவாயில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பாமார், அப்பம்மா, பூட்டி, பூட்டன் நவக்கிரியில் இருக்கும் பேரன், பேர்த்திமார் குடும்பங்கள், அச்சுவேலி பெரியப்பாகுடும்பம், சுன்னாகம் பெரியப்பாகுடும்பம், ஜேர்மனி பெரியப்பாகுடும்பம், அச்சுவேலி பேரன், பேர்த்தி குடும்பம், மாமா, மாமி குடும்பம், தெகிவளை மாமி குடும்பம், மட்டக்களப்பு தாத்தா குடும்பம், சுவீஸ் மாமாமார், அன்ரிமார், மலேசியா அம்மம்மா குடும்பங்கள், கரணவாயில் இருக்கும் பேரன் பேர்த்தி குடும்பங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

'கோணந்தோட்டம்'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.　　(2594)

★ 70 ஆண்டுகளுக்குப்பின்

# தனியாருக்கு சொத்து உரிமை சோவியத் அரசு அனுமதித்தது

மாஸ்கோ, பெப் 20

சோவியத் யூனியனில் தனி நபருக்குசொத்துரிமை வழங்க ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று ஒப்புதல் அளித்தது.

இனி அரசு மற்றும் கூட்டு அமைப்புக்கள் போலவே தனியாரும் சொத்துக்களை வாங்கி அதன் உரிமையை அனுபவிக்கலாம்.

ரஷ்யாவில் 1917இல் ஏற்பட்ட அக்டோபர் புரட்சிக்குப் பிறகு தனியாருக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது இதுவே முதல்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பேர்லின் சுவரை இடிப்பதை கி. ஜேர்மனி ஆரம்பித்துள்ளது

பொன், பெப். 21

பேர்லின் சுவரின் பெரும் பகுதியை உடைக்கும் வேலையை கிழக்கு ஜேர்மன் வீரர்கள் திங்கள் இரவு ஆரம்பித்தனர்.

பிரன்டன்பார்க் என்னும் இடத்துக்கும் சார்ளி காவல் நிலையத்துக்கும் இடையேயான சுவரே இடிக்கப்படுகிறது.

கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும் பிரிக்கும் சுவராக இது அமைந்துள்ளது.

கிழக்கு ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்ந்ததைத் தொடர்ந்து இரண்டு ஜேர்மனிகளையும் ஒன்றாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# உணவு உற்பத்தி அதிகரிப்பும் உலகம் சூடாகக் காரணமா?

## வேர்ல்வாட்ச் சஞ்சிகை தகவல்

உணவு உற்பத்தி அதிகரிப்பதால் தான் பூமி வெப்பமடைகின்றது.

அதிகரித்து வரும் சனத்தொகையின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்ய அதிக உணவு உற்பத்தி செய்யப்பட வேண்டியிருக்கிறது.

இதற்காக கூடுதல் நிலத்தில் உணவு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

இது எப்படி பூமியைச் சூடாக்கிறது என்று ஆச்சரியப்படாதீர்கள்!

விஞ்ஞானிகள் கூறுவதை வாசியுங்கள்.

பூமியைச் சூடாக்கும் வாயுக்களில் மிக முக்கிய இடத்தை மீதேன் (Methane) வாயுதான் வகிக்கிறது.

இரண்டாவது இடத்தை கார்பன்டை ஒக்ஸைட் வகிக்கிறது.

1950–1985க்கு இடைப்பட்ட காலத்தில் ஆசியாவில் உணவு உற்பத்திப் பெருக்கம் காணப்பட்டது.

வானவெளியில் மீதேன் வாயு பெருக்கம் ஏற்பட்டதற்கு இதுவே முக்கிய காரணமாக அமைகின்றது.

வேர்ல்ட் வாட்ச் சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

வயல் நிலங்களில் நீருக்கு அடியில் இருந்து மீதேன் வாயு உற்பத்தியாகிறது. அது பின்னர் நெற்பயிர்கள் வழியாக காற்றோடு கலக்கிறது.

நீர்ப்பாசன வசதி பெருக கூடுதல் நெற்பயிர்ச் செய்கை இடம் பெறுகிறது. அத்துடன் மீதேன் வாயுவும் கூடுதலாக உற்பத்தியாகி காற்றோடு கலக்கிறது.

ஒரு வருடத்தில் மூன்று போகம் நெற்பயிர்ச்செய்கை பண்ணப்பட்டால் காற்றோடு பல மடங்கு மீதேன் வாயு கலக்கிறது.

கால் நடை அதிகரிப்பும் மீதேன் வாயு உற்பத்தி அதிகரிக்கக் காரணமாகிறது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தீவிரமாக இடம் பெறும் நகரப்புற வளர்ச்சியும் மீதேன் வாயு உற்பத்திக்கு இன்னொரு காரணமாகும்.

குப்பை கூழங்கள் நிலத்தில் அமிழ்ந்து போவதால் மீதேன் வாயு உற்பத்தியாகி காற்றோடு கலக்கிறதாம்.

பத்தாண்டுக்கு முன்னர் வளி மண்டலத்தில் மீதேன் வாயுவின் அடர்த்தி ஆண்டு ஒன்றுக்கு ஒரு சதவீதமாக இருந்து வந்தது. இப்போது 2¼ சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

இக் காலத்தில் கார்பன்டை ஒக்ஸைட்டின் அடர்த்தி 25 சத வீதமாக வளிமண்டலத்தில் காணப்படுகிறது.

சனத்தொகை அதிகரித்து வரும் இத்தருணத்தில் வளி மண்டலத்தில் கூடுதல்மீதேன் வாயு போய்ச் சேருவதைத் தடுப்பது என்பது முடியாத காரியம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (எ)

# கட்சி விட்ட தவறுகளை மன்னித்து ஆட்சி அமைக்க ஆதரவுதாருங்கள்!

## மாநிலத்தேர்தல் கூட்டங்களில் ராஜீவ் காந்தி வேண்டுதல்

புதுடில்லி, பெப் 21

பதவியில் இருந்தபோது காங்கிரஸ் கட்சி பல தவறுகளைச் செய்து விட்டது, அவற்றை மன்னித்துக் கொண்டு மாநிலத் தேர்தல்களில் மக்கள் மீண்டும் காங்கிரஸுக்கு வாக்களிக்கவேண்டும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசியபோது குறிப்பிட்டார்,

வட இந்தியாவில் உள்ள மகாராஷ்டிரம், ராஜஸ்தான். பீகார், ஒரிஸ்ஸா, இமாசலப் பிரதேசம், குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டசபைத்தேர்தல்கள் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெற உள்ளன.

23 கோடி வாக்காளர்கள் இத்தேர்தல்களில் வாக்களிக்க உள்ளனர்.

கடந்த நவம்பரில் நடந்த நாடாளுமன்றத்தில் ராஜீவ் அரசு தோற்ற பின்னர் நடக்க உள்ள மாநில சட்டசபைத் தேர்தல்கள் இவையாகும்.

இதனால் இந்திய அரசியலில் இத்தேர்தல்கள் முக்கியம் பெறுகின்றன.

ஜனதாதள் அரசுப் பிரதமர் வி. பி. சிங்கும், இந்திரா காங்கிரஸ் [illegible] னான் பிரதமருமான ராஜீவ் காந்தியும் [illegible] தல் பிரசாரம் ஒன்றை தற்சமயம் மேற்கொண்டுள்ளனர்.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் பரிசால், கியேகன்ஜ்ஹர், ராய்ரங்பூர், பஹதல ஆகிய இடங்களில் திரு. ராஜீவ் காந்தி பல கூட்டங்களில் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

காங்கிரஸ் ஆட்சியில் பல தவறுகள் ஏற்பட்டு விட்டன. அவற்றை மக்கள் மன்னித்துக்கொண்டு எதிர்வரும் மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.

எல்லைப்புறத்துக்கு அப்பால் இருந்து கொண்டு இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் தீவிரவாத, பிரிவினைவாத சக்திகளின் பயமுறுத்தலுக்கு சிறுபான்மை தேசிய முன்னணி அரசு பணிந்து விட்டது.

மக்கள் இந்த அரசை ஏற்கவில்லை என்பதைக் காட்ட மாநிலத் தேர்தல்களில் தேசிய முன்னணி வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

தேசிய முன்னணி பதவிக்கு வந்ததன் பின்னர் பஞ்சாப், ஜம்மு – காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு சீர்குலைந்து விட்டது,

இப்படி ராஜீவ் காந்தி சொன்னார். (எ)

### மாகாண...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான சூழலுக்கான நிலை உருவாகி வரும்போது தமிழ்நாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது குழப்பத்தை ஏற்படுத்தும்.

இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்க்கப்படவேண்டும்.

எந்தக்குழுவும் இதுபோல் கசப்பான நிகழ்ச்சியை தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தக்கூடாது—என்றார்.

நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய திரு. பாலகுமாரன் மீண்டும் இன்று வியாழன் சென்னை திரும்பக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

### கம்பி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்பட்டு, மீண்டும் கம்பிகள் திருட்டுத்தனமாக வெட்டப்படமாட்டாது என உறுதி கிடைத்த பின்னரே மீண்டும் இணைப்புக்கள் வழங்கப்பட்டு, சேவை [illegible] தொலைத்தொடர்புப் பகுதி அதிகாரி ஒருவர் [illegible]

### ஆயுதங்கள் கடத்தி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கடத்தல் இடம் பெறுவது பற்றிய விவரங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் திரு. கருணாநிதி கூறினார்.

### சமாதான ----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாள் வெளியிட்டார்.

அப்போதே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கருணாநிதியின் தற்போதைய சமரச முயற்சிகளும் ஈ. பி. ஆர். எல். எவ். யோசனைகளும் போராளிக் குழுக்களிடையே சமாதான சக வாழ்வுக்கு வழிவகுக்கும் என்றும் திரு. வரதராஜப் பெருமாள் சொன்னார்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



## ★ ஹம்சவர்த்தினி ★

சிவசண்முகநாதன் லலிதாம்பிகை தம்பதிகளின் அருமைப் புதல்வி ஹம்சவர்த்தினி தனது முதலாவது பிறந்தநாளை 22-02-1990 இன்று அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, புங்குடுதீவு தாத்தா, அம்மம்மா, திருநெல்வேலி பேரன்மார், பேத்திமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முருகன் அருளால் பலகலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

'குமாரோதயம்'
நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.　　[11836]

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



அமரர்

## திருவேங்கடம் சின்னத்துரை

தோற்றம்: 04 - 07 - 1904　　மறைவு: 23 - 01 - 1990

நாவலர் வீதி, பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த திரு. திருவேங்கடம் சின்னத்துரை அவர்கள் 23 01-90ல் காலமானார் அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், இதர வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம். மறைவுச் செய்தியை நாட்டுச் சூழ்நிலை காரணமாக அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அந்தியேட்டி 21 02-1990 கீரிமலையில் நடைபெறும். வியாழன் 22-02-1990 பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்குபற்றும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி;- திருமதி மீனாட்சி சின்னத்துரை,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
229, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.　　[11838]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்
''நேசன்ஸ்''
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

22 - 02 - 1990 வியாழக்கிழமை

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKETS EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

## ஈழப்போராளிகளை சமாளிக்க தமிழக பொலீஸுக்கு பயிற்சி!

### டி. ஜி. பி. துரை தகவல்

இராமநாதபுரம், பெப் 22
போராளிகளின் தாக்குதலைச் சமாளிக்கக் கூடிய விதத்தில் தமிழ்நாடு பொலீஸாருக்கு நவீன ஆயுதங்களைக் கையாளுவதில் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு பொலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு. பி. துரை இராமநாதபுரத்தில் கடந்த செவ்வாய் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

மண்டபம் பொலீஸ் காவல் நிலையம் மீதான தாக்குதல் பொலீஸாருக்கு ஒரு நல்ல பாடமாகும்.

இனிமேல் போராளிகளின் தாக்குதலின் போது அவர்கள் கடுமையாக நடந்து கொள்ள தயாராக இருப்பார்கள்.

காவல் நிலையங்களில் உள்ள பொலீஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

சமுக விரோத மற்றும் குற்றவியல் சம்பவங்களில் எமது மண்ணில் ஈடுபடும் போராளிகளைக் கண்டு பிடிக்க விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளது.

சட்ட விரோத ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றுவதற்கு பொலீஸார் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

எமது மண்ணில் துப்பாக்கிக் கலாசாரம் பரவ நாம் இடமளிக்க மாட்டோம்.

தமிழ்நாடு கடலோரப் பகுதிக் காவலுக்குக் கூடுதல் பொலீஸார் பயன்படுத்தப் படுவர்.

மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் தங்களுக்குள் தாங்களே சண்டை இடுவதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுகிறது. அப்படியான நிலை ஏற்படாமல் அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப் படும்.

வெளியில் இருந்து வரும் பயமுறுத்தல்களில் இருந்து முகாமில் உள்ள போராளிகளையும் தமிழ்நாடு பொலீஸார் பாதுகாப்பார்கள்.

சமூக விரோத சக்திகள் கடலோரப் பகுதிகளில் நுழைவதையும், நடமாடுவதையும் தடுக்க பாம்பன், பட்டினம் - காத்தன், கோப்பேரிமடம், கலுங்கு, திருப்புலனி ஆகிய இடங்களில் 5 காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

எல்லாக் காவல் நிலையங்களுக்கும் முன் மண் சாக்குகள் அரண் அமைக்கப்படும். அரண் மேல் 24 மணித்தியாலமும் இயந்திரத்துப்பாக்கிகளுடன் பொலீஸார் காவல் பணியில் ஈடுபடுவர்.

கரையோர மற்றும் உட்பகுதிகளிலும் உள்ள கேந்திர நிலையங்களில் விசேட காவல் கோபுரங்கள் அமைக்கப்பட்டு விட்டன.

இராமநாதபுரம் தாக்குதலின் போது - கே 47, 9 மில்லி மீற்றர் பிஸ் _ ற்றும் ஒரு ரக ஆயுதம் உ 3 ரக ஆயுதங்கள் பயன் டுத்தப்பட்டுள்ளன. 3 ஆவது ரக ஆயுதத்தில் பயன்படுத்தப்பட்ட ரவை இன்னும் அடையாளம் கண்டுபிடிக்கப் படவில்லை.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய இரண்டு மாருதி ஜிப்ஸி ஜீப்களும் வெள்ளை நிற அம்பாஸடர் கார் ஒன்றும் இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை.

சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டார்களா? என்பதற்கான ஆதாரங்களும் இதுவரை இல்லை.- என்றார். (உ)

### 34 பட்டதாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம் பெப். 22
யாழ்- அரசாங்க செயலகத்தில் 34 பட்டதாரிகள், முகாமைத்துவப் பயிற்சியாளர்களாக எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து நியமனம் பெறுகிறார்கள்.

வேலையற்று இருக்கும் பட்டதாரி களுக்கு முகாமைத்துவத்தில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இவர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

இவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும்.
நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட வர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (இ - 3)

### ஆயுதக்குழு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யில் இப்படி முறையிடப்பட்டிருக்கிறது.

தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இராமநாதபுரம் சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் பதற்றம் அடைந்துள்ளனர்.

இலங்கைப் போராளிகள் தமிழகம் வருவதைத் தடுப்பதையும் தமிழகத்தில் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதையும் செய்யமுடியாத நிலையில் தமிழக அரசு நிர்வாக இயந்திரம் இருக்கிறது.

முதலமைச்சரின் அறிக்கையும் நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த உதவவில்லை,

இப்படி தந்தியில் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)

### பயிலுநர் ஆசிரியர்

## பெயர்ப் பட்டியல் இன்று வெளியிடப்படலாம்

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ். மாவட்டத்துக்குத் தெரிவான பயிலுநர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்கள் இன்றுமாலை வெளியிடப்படலாம் என அறிய வருகிறது.

13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்தும் புள்ளிவிவர அடிப்படையில் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பெயர்பட்டியல்கள் தயாரிக்கும் வேலைகள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் துரிதமாக நடந்ததைக் காண முடிந்தது.

பெயர்ப்பட்டியல்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் கோட்டக்கல்வி பிரிவுகளிலும் பார்வைக்கு வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ - 3 - 10)

### வடக்கு- கிழக்கு

## தமிழ் பொலிஸை நியமிக்க நேற்று நேர்முகப் பரீட்சை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பொலீஸாரை நியமிக்க நேற்று அநுராதபுரத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

நேற்று நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் தெரிவாவோர் பயிற்சியின் பின் நியமனம் வழங்கப்படும் என தெரியவந்தது.

யாழ் மாவட்டத்தில் இருந்து 10 பேர் இந்த நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி இருந்தனர். (இ10-3)

## வல்லைவெளிப் பாலத்தை திருத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ் பருத்தித்துறை வீதியில் வல்லைவெளிப் பகுதியில் உள்ள பாலம் ஒன்று திருத்தப்படவுள்ளது.

திருத்த வேலைகள் அடுத்த ஒருசில தினங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன. திருத்தவேலையை ஆரம்பிக்க வசதியாக பாலத்திற்குப் பதிலாக தற்காலிக பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

தற்காலிக பாதை அமைக்கப்பட்டதும் வாகனங்கள் அனைத்தும் அவ்வழியாகத் திருப்பி விடப்படும்.

அதன்பின்னர் பாலம் திருத்தும் வேலைகள் ஆரம்பமாகும். (ஒ-9)

## செயலக வங்கிக் கிளை மீண்டும் இயங்கும்

யாழ். அரசாங்க செயலகத்தில் இயங்கி வந்து மூடப்பட்ட இலங்கை வங்கியின் கிளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் மீண்டும் இயங்கும் என்று தெரிகிறது.

யாழ். அரசாங்க செயலகத்தில் இயங்கிய இந்த வங்கிக் கிளை 87 ஆம் ஆண்டு மூடப்பட்டு யாழ் ஆஸ்பத்திரி வீதிக் கிளைக்கு மாற்றப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஊழியர்களுக்கான சம்பளம் உட்பட பல கொடுப்பனவுகள் காசோலை மூலமே வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வங்கி இயங்கிய பின்பே ஊழியர்களின் சம்பளம் காசாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## வெள்ளை அறிக்கை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வம் காட்டியுள்ளது.

தி. மு. க. அரசு மற்றும் பொலீஸ் துறையின் உதாசீனப் போக்கினால் இன்று தமிழ்நாடு முழுவதும் ஆயுதப் போர் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

#### சகோதர யுத்தம்

முதலமைச்சர் கருணாநிதி கூறும் சகோதர யுத்தம் இலங்கைத் தமிழ்ப் பகுதியில் மட்டுமின்றி, இந்திய நாட்டின் தமிழ் மண்ணிலும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் எந்தவிதமான இடையூறும் இன்றி வெளி நாட்டினர் வந்து சென்றுகொண்டிருக்கும் துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டுள்ளது.

'கார்களில் வந்தவர்கள் சுட்டார்கள், ஓடிவிட்டார்கள்' என்று செய்திகள் வருவதும், சம்பவம் நடந்த 36 மணி நேரம் ஆகியும் சுட்டுவிட்டு ஓடியவர்கள் பிடிபடவில்லை என்பதும் ''இது என்ன அரசாங்கம்?'' என்று எண்ணத் தோன்றுகிறது.

#### பாதுகாப்பற்ற நிலைமை

இந்த நிலையைப் பார்க்கையில் தமிழ்நாட்டில் தமிழர்களுக்கே பாதுகாப்பு உண்டா என்பது கேள்விக் குறியாக ஆகிவிடும் போல் உள்ளது.

ஆயுதக் கடத்தலின் பின்னணியில் அதிகாரிகள், அரசியல்வாதிகள் இருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி கூறுகிறார்.

எல்லா ஆதாரங்களையும் பெறக்கூடிய நிலையில் இருப்பவர் முதலமைச்சர். ஆகவே யார் அந்த அரசியல்வாதிகள் என்பதை முதலமைச்சர் வெளிப்படுத்த வேண்டும்.

சமரசப் பேச்சு வெற்றி பெறாது என்ற நிலை உருவாகியுள்ளது. ஆகவே அதனைத் திசை திருப்ப ஆயுதக் கடத்தலில் அரசியல்வாதிகளின் பின்னணி இருப்பதாகக் கருணாநிதி கூறுகிறார்.

#### பொறுப்பற்ற பேச்சு

ஆயுதங்களைப் [illegible]

செய்வதையும் போராளிகளைக் கட்டுப்படுத்துவதையும் விட்டுவிட்டு, போராளிகளுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களை முறியடிக்க திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதி என்று கருணாநிதி இராமநாதபுரம் சம்பவத்தை வர்ணித்திருப்பது பொறுப்பற்ற பேச்சாகும்.

இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக்கு குரல் கொடுக்கும் முன்னர் தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பையும் பந்தோபஸ்தையும் முதலமைச்சர் கருணாநிதி உறுதிப்படுத்த வேண்டும்.

— இப்படி திரு. வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார்.

#### வேதனைக்குரியது

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும் என்னும் பொருளில் சமரசப் பேச்சுக்களில் நடுநிலையாளராக உள்ள கருணாநிதியே கூறியிருப்பது வேதனையாக உள்ளது.

சமரசப் பேச்சு என்பதை விட்டு இலங்கைத் தமிழர்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிப்பதும், வடக்கு -கிழக்கு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் பரவலாக்கப்படும் வரை அமைதிப் படை வெளியேறக் கூடாது என்ற குரல்தான் முதலமைச்சர் கருணாநிதியின் குரலாக ஒலிக்க வேண்டும்

இப்படி வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். [உ-எ]

## ஆயுதங்களுடன்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
'மண்டபத்திலுள்ள இளைஞர் விடுதிகளில் 'புளொட்' இயக்கத்தைச் சேர்ந்த உமாபிரகாத், மாணிக்கதாசன், ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா போன்ற தலைவர்கள் தங்கியிருந்தனர்.

அவர்களைக் கொலை செய்வது அல்லது கடத்திச் செல்வது என்ற நோக்கத்துடன் தான் போராளிகள் [illegible] ஆயுதங்களுடன் கார்களில் வந்ததாக சில வட்டாரங்கள் கூறுகின்றன.

படகு மூலம் ரகசியமாக வந்திறங்கிய போராளிகள் குழு ஒன்றின் தலைவரை அழைத்துச் செல்வதற்காகத் தான் போராளிகள் அந்த வழியாக வந்ததாக வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் ஆயுதங்களுடன் மூன்று கார்களில் போராளிகள் அந்த வழியாகச் சென்றது ஏன் என்ற மர்மம் நீடிக்கத்தான் செய்கிறது'—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காங்கேசன் முகாமில் தடுத்து வைக்கப்பட்டோரின்

## விடுவிப்புச் சான்றிதழில் மாற்றம்; அதன் பின்பே இளைஞர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 22
இந்தியப்படையின் தடுப்பு முகாமில் நாம் கடந்த 3 மாத காலமாக மட்டுமே நன்றாகப் பராமரிக்கப்பட்டோம் என விடுவிப்புச் சான்றிதழில் திருத்தம் செய்யப்பட்ட பின்னரே நாம் அதில் கையெழுத்திடச் சம்மதித்தோம். அதன் பின்னரே நாம் விடுவிக்கப் பட்டோம்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை அமைதிப் படை முகாமிலிருந்து விடுதலையான வல்வெட்டித் துறை வாசிஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை ஐநூற்றுக்குமேற் பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்களிடமும் இந்த விடுவிப்புச் சான்றிதழில் கையெழுத்துப் பெறப்பட்டது. ஆனால் அவர்கள் அனைவரும் எம்மை விடுதலை செய்தால்போதும் என்ற நிலையில் சான்றிதழைவாசிக்காமலே கையெழுத்துப் போட்டுவிட்டுச்சென்றுவிட்டனர். சான்றிதழ் ஆங்கிலத்தில் இருந்ததால் நாமும் அது பற்றிவிளக்கம்கேட்கவில்லை.

ஆனால் நேற்று முன்தினம் இந்தச் சான்றிதழ் எம்முடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த திரு. ரஹீமிடம் கையெழுத்துக்காக ஒப்படைக்கப்பட்டது. அப்போது அவர் அதை வாசித்துவிட்டு தாம் கையெழுத்திட முடியாது என்றதுடன் எமக்கும் நிலைமையை விளக்கினார்.

அந்த விடுதலைச் சான்றிதழில் நாம் தடுப்பு முகாமில் நன்றாகக் கவனிக்கப்பட்டதாகவும்—

உரிய வைத்திய உதவி எமக்கு வழங்கப்பட்டது என்றும்—

துன்புறுத்தல் எதற்கும் நாம் ஆளாகவில்லை என்றும் எழுதப்பட்டிருப்பதாக அவர் எமக்குச் சொன்னார்.

அதனை அடுத்து நாமும் அவருடன் சேர்ந்து சான்றிதழில் கையெழுத்திட மறுத்து விட்டோம்.

இதனை அடுத்து எமது விடுதலை காலையில் ரத்தாகியது.

பின்னர் பிற்பகலில் இந்தியப் படையின் உயரதிகாரி ஒருவர் வந்து எம்முடன் பேச்சு நடத்தினார்.

அதனை அடுத்து இந்தியப் படையினர் தமது சான்றிதழில் திருத்தம் செய்ய ஒப்புக் கொண்டனர் — என்றார். (உ-9)

### நினைவு அஞ்சலி

சாவகச்சேரி, பெப் 22
வீரமரணம் அடைந்த கப்டன் நடேசு (சிங்கராசா) அவர்களின் 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

மட்டுவில்தெற்கில் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சாவகச்சேரி அரசியல் பொறுப்பாளர் திரு. கி. பாப்பா அஞ்சலி உரை நிகழ்த்தினார். (இ-31)

### பல்கலைக்கழக தளபாடத்துக்கு ரூ. 50 லட்சம்

யாழ்ப்பாணம், பெப் 22
கடந்த கால வன்செயல்களின் போதுயாழ். பல்கலைக்கழகத்தில் சேதமடைந்த தளபாடங்களை மீளப்பெற 50 லட்சம் ரூபா உதவிவழங்கும்படி புனர்வாழ்வுஅமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

இந்த உதவி கிடைத்தால் தற்சமயம் தளபாடங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திரு. V.K. சபாரத்தினம் (C.A.S)

கந்தர்மடத்தைச் சேர்ந்த [முன்னைய சிரேஷ்ட கமத்தொழில் ஆணையகளரும், முன்னைய முகாமையாளர் (Home Finance Ltd. யாழ்ப்பாணக் கிளை), இலண்டனில் 20-02-1990 அன்று காலமானார். இவர் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், நந்தகுமார் A.C.A. (Canada), Dr. அருள்குமார் (பேராசிரியர் Singapore), இரட்ணகுமார் A.C.A. (Canada), ஞானக்குமார் பொறியியலாளர் (Canada), ஸ்ரீகுமார் வர்த்தக நிர்வாகஸ்த்தர் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. செந்தில் செல்வி (Canada), காயத்திரி (Singapore) ஜெயராணி (Canada), சிவகௌரி (Canada), சுரேஷினி (London), ஆகியோரின் மாமனாரும், சிவரம்யா, ஆரத்தி, சங்கரி, நிஷகந்தா, ரூபன், வித்யா, யதீஷா ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 25-2-90 அன்று இலண்டனில் நடைபெறும்.

தகவல்:
V.S.S.K. சிவகுருநாதன்
திருமதி விஜயலஷ்மி கணேஸ்,

3 Sandra Close
Hounslow
Middlesex
T. W. 3 22
United Kingdom

(11837)

### காசிநாதர் ஆறுமுகம் சபாரத்தினம்

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்தவரும், மூதூர் பிரபல விவசாயியுமான காசிநாதர் ஆறுமுகம் சபாரத்தினம் 20-02-90 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். இவர் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும், இரத்தினசபாபதி, சவுந்தலாதேவி, கணபதிப்பிள்ளை, கனகசபாபதி, (கிராமசேவையாளர் காரைநகர் தெற்கு), சண்முகரத்தினம் (காரைநகர்தபாற்கந்தோர்), ஆறுமுகம்பிள்ளை (M.P.C.S. காரைநகர்) சரோஜினிதேவி, குணநாயகம் (மூதூர்), இராசநாயகம் (பிரதேசசபை காரைதெற்கு) சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற ஆ. கனகசபை, திருமதி ஒப்பிலாமணி வள்ளியம்மையின் அன்புச் சகோதரருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-02-90 வியாழக்கிழமை காலை 9மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ச. தங்கரத்தினம்

நீலிப்பந்தனை,
காரைநகர்.

(2010)

### S. ஸ்ரீ சந்திரபாலன்

கந்தர் மடத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இலங்கை மின்சாரசபை ஊழியர் ஸ்ரீ சந்திரபாலன் 20- 2- 1990 இல் காலமானார். இவர் திரு. திருமதி சீனித்தம்பியின் ஏகபுதல்வரும், விஜலட்சுமியின் அன்புக்கணவரும், பவித்ரா. பவானி ஆகியோரின் அன்புத்தந்தையும், சுன்னாகம் பிரபலவர்த்தகர் திரு. A. M. சுப்பிரமணியம் தம்பதிகளின் அருமை மருமகனும், திருமதி, தருமரஞ்சிதம், திருமதி. மனோகராணி, திருமதி. பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு R. சண்முகலிங்கம் (புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்) திரு. V. இரத்தினசிங்கம் (ஓமான்), திரு. K. A. பரராஜசிங்கம் (மட்டு விற்பனைத்திணைக்களம்) ஆகியோரின் மைத்துனரும் இ. ரம்யா, ப. ஜேனுகா, ப. ராகவன் ஆகியோரின் அருமைமாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 - 2 - 90 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொத்தியால் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. A. M. சுப்பிரமணியம்,

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(11857)

### திரு. கருணானந்தன் சந்திரமௌலி

திரு. சந்திரமௌலி அவர்களின் ஈமக்கிரியைகள் முன்னறிவித்தலின்படி அன்றி 22 02 - 90 வியாழக்கிழமை மாலை 2. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கருணானந்தன்:

26, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(11858)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org